# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்
**273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018**

**டாக்டர்.மு.ராஜேந்திரன், இ. ஆ. ப.,**
**ஆணையர்**


ந.க. எண். : 98/ 2019/கூ.தே.1 நாள்: 03 .07.2019

**தேர்தல் திட்டம் (EP (CV) No. 01 /2019)**
**(Communication of Election Programme)**
(1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52(5) –ன் கீழ்)

***

1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்டு, 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண். 52 மற்றும் 53 ல் விவரித்தபடி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு, சட்டப்பிரிவு 33(11) மற்றும் விதி எண். 52–A-ன் படி, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், (இனி ஆணையம் எனப்படும்), விதி எண். 52 (5)–ன் கீழ் இணைப்பு 1–ல் தரப்பட்டுள்ள விவரப்படியான கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள் காலியிடங்களுக்கான (Casual Vacancies) தேர்தல்களை நடத்துவதற்கு இணைப்பு 2–ல் கண்டுள்ளபடியான தேர்தல் திட்டத்தை இதன்மூலம் அறிவிக்கிறது.

2. **மாநில தேர்தல் அலுவலர்கள் (State Election Officers) :**
   1) இத்தேர்தல் திட்டத்தை தொடர்புடைய சங்கங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவித்துவிடவும்,
   2) விதி 52–A(3)–ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்களை நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. **மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) :**
   1) 1983–ம் தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள் விதி எண். 52(6)(a) மற்றும் (b)–யில் சொல்லப்பட்ட படி தேர்தல் அறிவிப்பை வழங்கிடவும்,
   2) விதி எண். 52 (1 )(c) மற்றும் 52 (3 )(a)–ல் சொல்லப்பட்ட படி முறையே வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரை நியமனம் செய்திடவும்,

...2

3) விதி எண். 52 மற்றும் ஆணையத்தால் இது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டளைகள் படி தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடப்பதை ஒருங்கிணைப்பு செய்தும், ஒத்துழைத்தும் மற்றும் உறுதி செய்திடவும்.
4) ஒவ்வொரு தேர்தல் நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் அதுபற்றிய சட்டபூர்வமான அறிக்கைகளை தேர்தல் அலுவலர்கள் அனுப்பிடவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. <u>இத்தேர்தல் திட்டம் தொடர்புடைய சங்கங்கள் :</u>

இச்சங்கங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சட்டப்பூர்வ கடமைகளை விதி எண். 52 (19)–ல் சொல்லப்பட்டபடியும், இதர வகையிலும், குறிப்பாக விதி எண். 52 (6)(d), (6)(e), (7)(a), (7)(c) மற்றும் (10)(a)-ன் படியும் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றன.

ஒம்/–
ஆணையர்

03/07/19
ஆணையருக்காக

இணைப்பு: மேற்கண்டவாறு

பெறுநர் :

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்
2. தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
3. இணைப்பில் உள்ள சங்கங்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலமாக

} தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் ( மின்னஞ்சல் மூலம்)

நகல் :

1. தலைமைச் செயலர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
2. அரசு முதன்மை செயலர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
3. காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை – 4
4. தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
5. தொடர்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்
6. தொடர்புடைய தேர்தல் பார்வையாளர்கள்

} தகவலுக்காக ( மின்னஞ்சல் மூலம்)

| இணைப்பு – I | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், | | | | | | |
| ந.க. எண். 98/ 2019/கூ.தே.1 (1) தேர்தல் திட்டம் (EP (CV) No.01 /2019 | | | | | | |
| வ. எண் | சங்கத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | நிர்வாகக் குழு உறுப்பினர்கள் | | | |
| | | | பட்டியல் இனத்தவர்/ பழங்குடியினா் | பெண்கள் | பொது | மொத்தம் |
| 1 | ஏ.659 பாலமேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | மதுரை | 0 | 1 | 0 | 1 |
| 2 | ஏ.1271 ஓடைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | தேனி | 0 | 0 | 1 | 1 |
| 3 | எம்.பி. 92 மயிலாடும்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | தேனி | 0 | 0 | 1 | 1 |
| 4 | கே.கே. 103 தொகரப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | கிருஷ்ணகிரி | 0 | 0 | 1 | 1 |
| 5 | விழுப்புரம் மாவட்ட பொது சுகாதாரத்துறை பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | விழுப்புரம் | 0 | 0 | 1 | 1 |
| 6 | எம்.டி.தனி 79 ரெங்கசமுத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | தேனி | 0 | 0 | 1 | 1 |
| மொத்தம் | | | 0 | 1 | 5 | 6 |

ஒம்/–
ஆணையர்

03/07/19
ஆணையருக்காக

இணைப்பு–2

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

தேர்தல் திட்டம் 2019

(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 )- ன் கீழ்)

ந.க. எண். : 98/ 2019/கூ.தே.1 (1) தேர்தல் திட்டம் (EP (CV) No. 01 /2019)

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 08.07.2019 |
| 2. | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 10.07.2019 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 10.07.2019 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 13.07.2019 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 13.07.2019 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 15.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 16.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 16.07.2019<br>நேரம் : 5 பி.ப |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 19.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 20.07.2019<br>நேரம் : 11 மு.ப முதல் 4 பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 20.07.2019<br>நேரம் : 5 பி.ப |
| 12. | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 22.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 22.07.2019<br>நேரம் : 5 பி.ப |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 26.07.2019<br>நேரம் : 8 மு.ப முதல் 5 பி.ப |
| 15. | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 27.07.2019<br>நேரம் : 10 மு.ப முதல் |

ஒம்/–

ஆணையர்

03/07/19

ஆணையருக்காக